**கடுவெல மாநகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 22 ஆந் திகதி நகர பிதாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கடுவெல மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொருள் மெய்மையாய்வினால் அல்லது பௌதீக மெய்மையாய்வினால் உறுதிப்படுத்தப்படாத பெறுமதி ரூபா 6,949,837 தொகையான 20 வருடங்கள் பழமையான நிலையான சொத்து மீதியொன்று கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கட்டளையிடப்படாத பெறுமதி ரூபா 2,247,000 தொகையான 03 முச்சக்கர வண்டிகள், ரூபா 1,375,000 பெறுமதியான 02 கொள்கலன் பெட்டிகள் மற்றும் ரூபா 6,141,000 பெறுமதியான 03 மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் என்பவற்றுக்காக கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 நவம்பர் 01 ஆந் திகதி வைப்புச் செய்யப்பட்ட ரூபா 50,000,000 பெறுமதியான 05 நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ரூபா 307,876 தொகையான வட்டி கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 307,876 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடும் போது மேலதிகமாக அறவிடப்பட்ட ரூபா 32,686 தொகை, ஆரம்ப கடன் மீதிக்கு எதிராக பதிவழிக்கப்பட்டமையின் காரணமாக பெற வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 32,686 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 9,369,587 கடன்கொடுத்தோர் நிதி ஏற்பாடாகக் கருதப்பட்ட 22 வேலைகள் கைவிடப்பட்டமையால் திரண்ட நிதியம் அப்பெறுமானத்தால் குறைத்தும், கடன்கொடுத்துோர் அதிகரித்தும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபைக்குக் கிடைக்கப் பெற்ற ரூபா 4,750,000 பெறுமதியான நடமாடும் நூலக பேரூந்து வண்டி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கடுவெல மாநகர சபையின் நிதிப்பங்களிப்பின் அடிப்படையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட ரூபா 26,110,000 தொகை கடன்கொடுத்தோர் கணக்கிலிருந்து அகற்றப்படாமையினால் கடன்கொடுத்தோர் அதிகரித்தும், திரண்ட நிதியம் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஏ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 111,797 தொகையான முத்திரைக் கட்டணம் பொது வைப்பின் கீழ் பதியப்பட்டிருந்தது.

### 1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

சபையினால் வெளித்தரப்பினருக்கு எதிராக ரூபா 288,480 பெறுமதியான 45 வழக்குகளும், வெளித்தரப்பினரால் சபைக்கு எதிராக ரூபா 25,369,299 பெறுமதியான 28 வழக்குகளும் தொடரப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு வரவு மீதி ரூபா 24,387,101 ஆக இருந்த போதிலும், பட்டோலையில் காண்பிக்கப்படுகின்ற வங்கிக் இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் காசேட்டின் மீதி ரூபா 4,975,471 ஆகும். அதன் பிரகாரம் இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடு ரூபா 19,411,630 ஆகும்.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### பெறவேண்டிய கணக்குகள்

(அ) நிலுவை கடை வாடகை செலுத்தாமையின் அடிப்படையில் முத்திரையிடப்பட்ட சபைக்குச் சொந்தமான 14 கடைகளை மீள மதிப்பீடு செய்து வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகைப் பெறுமதி ரூபா 2,354,369 ஆகும். அந்த வாடகையை அறவிடுவதற்கோ அல்லது நீண்டகாலமாகக் கொண்டுவரப்படுகின்ற நிலுவை வாடகையை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பத்தரமுல்ல உப அலுவலகத்திற்குரிய ஐயவடனகம விழா மண்டபத்தின் நிலுவை வாடகை ரூபா 307,430 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

ரூபா 26,847,072 பெறுமதியான 02 கணக்கு விடயங்களுக்குரிய சான்றுகள் இல்லாமையின் காரணமாக திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 254(அ)(2)ஆம்பிரிவு | 58,640,348 | சபைக்கு அறவிட வேண்டிய சகல வரிகளும் அறவிடப்பட்டு அது மாநகர சபையின் நிதியத்தில் செலவு வைப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் நகர ஆணையாளரின் பணியாக இருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய 09 வருமான விடயங்களின் நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப்பிரமாணம் 371(5) | 896,472 | தொடர்ச்சியாக கொண்டுவரப்படுகின்ற தீர்க்கப்படாத முற்பண மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டது. |
| | (ii) நிதிப்பிரமாணம் 571 | 1,242,151 | வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை இனங்கண்டு / விசாரணை செய்து வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 03 வருடங்கள் முதல் கொண்டுவரப்படுகின்ற வைப்பு மீதி தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | சுற்றறிக்கைகள் | | |
| | (i) 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/44 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் | - | பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு அல்லது உள்ளூராட்சி சேவைக்குரிய மதிப்பீட்டாளரின் கீழ் ஒருவரால் ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை அதன் |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கை | | மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும், கடுவெல பொதுச் சந்தைத் தொகுதியின் சந்தைக் கடைகளின் மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை 2001 ஆம் ஆண்டு முதல் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை |
| (ii) | உள்ளுராட்சி ஆணையாளரின் 1995 மார்ச் 19 ஆந் திகதிய LG-95-4 ஆம் இலக்க சுற்றறிக்கை | 470,000,000 | சபையினால் நிலையான வைப்புக்களை மீளப் பெறும் போது மேல் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் முன் அங்கீகாரமின்றி நடப்பாண்டின் போது 31 நிலையான வைப்புக்கள் காசாக மாற்றப்பட்டிருந்தது. |
| (iii) | 2012 யூலை 11 ஆந் திகதிய WP/IPD/01/2012 ஆம் இலக்க மேல் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | | திட்டமிடல் குழுவில் பங்குபற்றியதற்காக இரணடு உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கைக்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 194,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) | 1993 நவம்பர் 18 ஆந் திகதிய நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரின் திட்டமிடல் சுற்றறிக்கை இல 15 | 5,542,851 | உள்ளுராட்சி நிறுவனங்கள் மூலம் அறவிடப்படுகின்ற சேவைக் கட்டணங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கான வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் அறவிடப்பட்ட சேவைக் கட்டணங்கள் அவ்வாறான கணக்கில் வைப்புச் செய்யப்படாமல் சபையின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 799,722,412 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 513,259,716 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

-----------------------------

செயற்படு நிலையில் காணப்படாத மக்கள் வங்கியின் 196-1 -001-6-3869561 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் நீண்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 824,084 தொகையான மீதி இனங்கண்டு தீர்த்து வைக்கப்படவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 132,453,000 | 147,813,564 | 107,299,737 | 27,047,891 | 132,053,000 | 143,701,501 | 91,394,666 | 53,344,443 |
| வாடகை | 11,347,325 | 19,323,989 | 8,514,434 | 1,899,115 | 10,993,114 | 17,716,693 | 7,805,879 | 1,314,304 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 12,700,000 | 13,749,903 | 9,608,221 | - | 12,655,000 | 17,918,621 | 13,071,172 | - |
| ஏனைய வருமானம் | 683,196,500 | 787,783,777 | 187,520,341 | 15,096,773 | - | - | - | - |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

ஆதனவரி, கடை வாடகை, களியாட்ட வரி, அனுமதிப்பத்திரக் கட்டணம் போன்ற சபைக்கு கிடைக்க வேண்டிய ஒட்டுமொத்த நிலுவை வருமானங்களை சேகரித்தல் நலிவான நிலையில் காணப்பட்டது.

### 2.3.3 வீதவரியும் வரியும்

**(அ) ஆதன வரி**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை ஆதனவரிப் பெறுமதி ரூபா 46,101,907 ஆக இருந்ததுடன், அந்த நிலுவைப் பெறுமதியில் ரூபா 1,687,272 தொகை 2018 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது.

**(ஆ) களியாட்ட வரி**

1946 இன் 12 ஆம் இலக்க களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற 03 சினிமா திரையரங்குகளுக்கு மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட களியாட்ட வரித்தொகை ரூபா 3,736,409 ஆகும். அதில் ரூபா 3,564,460 தொகை ஆண்டில் அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 7,516,093 தொகையான நிலுவை ஆண்டின் இறுதியளவில் ரூபா 9,730,039 வரை அதிகரித்திருந்தது. களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் பிரகாரம், செலுத்தாது புறக்கணிக்கின்ற நிலுவை தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கோ அல்லது அறவிடுவதற்கோ சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) அபிவிருத்தி செய்யப்படாத காணிக்கான வரி**

2017 ஆம் ஆண்டிற்காக அபிவிருத்தி செய்யப்படாத காணிக்கான வரி அறவிடுவதற்கு 2016 திசெம்பர் 23 ஆந் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட போதும், 2017 ஆம் ஆண்டின் போது சபையினால் மேற்குறிப்பிடப்பட்ட பிரகாரம் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

**(அ) வியாபார வரி**

கடுவெல மற்றும் அத்துறுகிரிய மாவட்ட அலுவலக அதிகார பிரதேசத்திற்குரிய 209 வியாபார நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 589,000 நிலுவை வியாபார வரி வருமானமாக இருந்தது.

**(ஆ) கைத்தொழில் வரி**

கடுவெல மற்றும் அத்துறுகிரிய மாவட்ட அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்குரிய 380 கைத்தொழில்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,835,000 தொகை நிலுவை கைத்தொழில் வரி வருமானமாகும்.

**(இ) வியாபார அனுமதிப்பத்திரம்**

கடுவெல மற்றும் அத்துறுகிரிய மாவட்ட அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்குரிய 191 வியாபார நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 953,000 தொகை வியாபார அனுமதிப்பத்திர வருமானமாகும்.

**(ஈ) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம்**

2017 ஆம் ஆண்டின் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் காலம் முடிவடைந்துள்ள 21 நிறுவனங்களில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன் அதன் மூலம் சபைக்கு ரூபா 84,000 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

**2.3.5 வாடகை**

கடுவெல மாநகர சபைக்குரிய பொதுச்சந்தை கடைகளின் வாடகை 2001 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்பட்டிருந்ததுடன் வியாபாரக் கடைகளின் வருடாந்த வாடகை ரூபா 6,999,795 ஆகும். இந்த கடைகளுக்காக 1984 ஆம் ஆண்டின் பின்னர் இதுவரையிலும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படாதிருந்ததுடன், இந்த கடைகள் குறித்த காலத்தில் மதிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக வருடாந்தம் ரூபா இரண்டு மில்லியனை விட கூடுதலான தொகையொன்று 10 வருட காலமாக சபை இழந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும்

நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) கைவிடப்பட்ட இலக்குகள்**

மீளாய்வாண்டின் போதும், முன்னைய ஆண்டின் போதும் ரூபா 92,041,659 பெறுமதியான 130 வேலைகளுக்காக கேள்விகள் கையளிக்கப்பட்ட போதும் அவைகள் அமுல்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. இந்த வேலைகளில் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக அத்துறுகிரிய உப அலுவலகத்தில் 40 வேலைகளுக்கான ரூபா 27,383,558 தொகையும், பத்தரமுல்ல உப அலுவலகத்தில் 49 வேலைகளுக்கான ரூபா 28,608,799 தொகையும் மற்றும் கடுவெல உப அலுவலகத்தில் 41 வேலைகளுக்கான ரூபா 36,049,302 தொகையும் உள்ளடங்கியிருந்தது.

**(ஆ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட வேண்டிய மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 24,057,654 தொகையான 14 வேலைகள் 2018 யூன் வரையிலும் ஆரம்பிக்கப்படவில்லை.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் உருவாகின்ற கழிவுப் பொருட்கள் சபையின் ஊழியர்களையும் வாகனங்களையும் பயன்படுத்தி சேகரிக்கப்படுகின்றது. அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 135,755,158 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அவ்வாறு சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட 02 நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 44,635,812 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 180,392,970 ஆகும். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 228 ஆம் பிரிவின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ii) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 229(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தகாரரிடமிருந்து பெறவேண்டிய பிணை பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 131 ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றாடலுக்கும், மக்களுக்கும் மற்றும் வனவிலங்குகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கு சபையினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் முறையாக கழிவுப்பொருட்களை அகற்றுகின்றனர்களா எனவும், எந்தப் பிரதேசத்தில் கொண்டு போடப்படுகின்றது எனவும் சபையினால் ஆராய்ந்து பார்க்கப்படவில்லை.

(iv) சபை அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக போதியளவான வாகனங்கள் மற்றும் ஊழிய வளங்கள் சபையிடம் காணப்பட்ட போதும் இந்த இலக்குகளை சபைக்கு மிகவும் நலன்பெறக் கூடிய வகையில் நிறைவேற்றுவதற்காக எதிர்காலத் திட்டமொன்றோ அல்லது ஆய்வொன்றோ மேற்கொள்ளப்படவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பாக 2030 இன் நிகழச்சி நிரல் தொடர்பாக சபைக்கு அறிவிக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

**(அ) நூலக நிர்வாகம்**

பத்தரமுல்ல, கடுவெல மற்றும் அத்துறுகிரிய போன்ற உப அலுவலகங்களில் நடாத்திச் செல்லப்படுகின்ற சபைக்குச் சொந்தமான மூன்று நூலகங்களிலும் ரூபா 59,564 பெறுமதியான 430 பழுதடைந்த புத்தகங்கள், ரூபா 116,559 பெறுமதியான தொலைந்துபோன 625 புத்தகங்கள் மற்றும் ரூபா 227,587 பெறுமதியான மீளக் கையளிக்கப்படாத 814 புத்தகங்கள் என்பன அவதானிக்கப்பட்டதுடன் இந்த புத்தகங்களின் பெறுமதியை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கும், பொருத்தமான பிரகாரம் தயாரித்து பாவனைக்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ஆ) உயிரியல் வாயுப் பிரிவு**

மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையினால் மானியமாக சபைக்கு வழங்கப்பட்ட உயிரியல் வாயு அலகு பல வருட காலமாக செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் அதனை நல்ல நிலைக்கு கொண்டுவந்து கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக ஈடுபடுத்துவதற்கு சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**(இ) முன்பள்ளிப் பாடசாலை மற்றும் பகல் காப்பு நிலையங்கள்**

பத்தரமுல்ல உப அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்குரிய முன்பள்ளிப் பாடசாலை மற்றும் பகல் காப்பு நிலையங்களுக்கு முன்பள்ளிப் பாடசாலை ஆசிரியையும் உதவியாளரும் நியமிக்கப்பட்டிருந்த போதும், பகல் காப்பு நிலையத்தில் இரண்டு சிறுவர்கள் மாத்திரம் இருந்ததுடன், முன்பள்ளிப் பாடசாலையின் பிள்ளைகள் இருக்கவில்லை. இந்த நிலையத்திற்காக பிள்ளைகள் சேர்க்கப்பட்டமைக்கான காரணமாக, முன்பள்ளிப் பாடசாலை கட்டிடம் போதியளவான இடவசதிகளுடன் காணப்படாமை மற்றும் சுகாதார வசதிகள் இல்லாதிருந்தமை தாக்கமளித்திருந்ததாக அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த நிலையத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள முன்பள்ளிப் பாடசாலை ஆசிரியையினதும் உதவியாளரினதும் சேவை இரண்டு பிள்ளைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது.

**(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு**

வாகனங்களிலிருந்து கழற்றி அகற்றப்படுகின்ற உதிரிப் பாகங்கள் களஞ்சியத்தில் முறையற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தது.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறு.

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடம் |
|---|---|---|---|
| பதவிநிலைத் தரம் | 20 | 10 | 10 |
| இரண்டாம் நிலை | 113 | 102 | 11 |
| ஆரம்ப நிலை | 467 | 430 | 37 |
| மொத்தம் | 600 | 542 | 58 |

(i) வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர் பதவிகள் 10 ஆக இருந்ததுடன், பிரதி நகர ஆணையாளர், மாநகர செயலாளர், பொறியியலாளர், சுகாதார லைத்திய உத்தியோகத்தர், ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர், கால்நடை வைத்திய உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் (விசேட தரம்) மற்றும் வருமானப் பரிசோதகர் (விசேட தரம்) என்ற பதவிகள் 01 வீதம் 08 வெற்றிடங்களும், 02 நிர்வாக உத்தியோகத்தர்களும் வெற்றிடமாகக் காணப்பட்டனர்.

(ii) சபையின் பிரதான அலுவலகத்திற்கும், உப அலுவலகத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்களுக்குப் புறம்பாக 84 அமையத் தொழிலாளர்கள் மீளாய்வாண்டின் போது சேர்க்கப்பட்டிருந்ததுடன், அந்த ஊழியர்களுக்கு எழுத்து மூலம் கடமைகள் கையளிக்கப்படவில்லை. அவர்களில் அனேகமானோர்களுக்கு அலுவலகத்தில் ஆவணங்களின் நடவடிக்கைகள் மற்றும் கணனி நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) ஊழியர் கடன்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 54,214,598 இருந்ததுடன் பணியிட மாற்றம் பெற்றுச் சென்ற 16 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 51,428 தொகையும், ஓய்வு பெற்றுச் சென்ற 62 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 383,783 தொகையும், சேவையைத் தடைசெய்த 12 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 127,555 தொகையும், சேவையை விட்டுச் சென்ற 28 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 389,810 தொகையும் மற்றும் மரணமடைந்த ஒரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 7,500 தொகையுமாக அறவிடவேண்டிய மீதிகள் காணப்பட்டன. அந்த நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

(அ) பத்தரமுல்லல அதிகாரப் பிரதேசத்தில் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவிடப்படாமையின் காரணமாக சபை இழந்திருந்த வருமானம் ரூபா 80 மில்லியன் அளவில் இருந்தது. அவ்வாறே 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனவரி மதிப்பீடொன்று செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், கடுவெல, அத்துறுகிரிய மற்றும் பத்தரமுல்ல போன்ற மூன்று அதிகாரப் பிரதேசங்களிலும் 2000 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவிடப்படுகின்றமையால் சபைக்கு பாரியளவிலான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) பத்தரமுல்ல மாவட்ட அலுவலகத்திற்குரிய றோயல் பிளாசா கடைத் தொகுதியின் இரண்டாவது மாடியின் மூன்று கடைகள் நீண்ட காலமாக மூடிவைக்கப்பட்டிருந்ததுடன் அதந் கடைகளிலிருந்து ரூபா 29,782 தொகையான நிலுவை கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் இரண்டு கடைகள் 06 வருடமாகவும், மற்றைய கடை 03 வருடகாலமாகவும் மூடி வைக்கப்பட்டிருந்தன.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை

சபையினால் பேணிச் செல்லப்படுகின்ற காணிப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. காணிப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட 49 காணிக் கூறுகளுக்கான உரித்துறுதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. சபைக்குச் சொந்தமான காணி மற்றும் பொது வசதிகளுக்காக வழங்கப்பட்ட காணி தொடர்பாக சபையின் கட்டுப்பாடு மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது.

### 3.5.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

**வாராந்த சந்தையை மீளமைத்தல்**

(அ) கடுவெல மாநகர சபையினால் கடுவெல சந்தையை மீளமைப்பதற்காக 0.98211 ஹெக்டேயார் காணியை கைப்பற்றுவதற்கு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 80,025,000 தொகை நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருததி நிதியத்திலிருந்து 6.5 சதவீத வட்டி விகிதத்தின் கீழ் பெறப்பட்ட ரூபா 40 மில்லியனுக்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கடன் தவணைப் மற்றும் வட்டியாக ரூபா 14,023,246 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், காணியின் உரிமையாளருக்கு இழப்பீட்டுப் பணத்தைச் செலுத்தி வாராந்த சந்தை அமைந்துள்ள காணியை சபைக்குக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 செப்தெம்பர் 09 ஆந் திகதி இந்த வாராந்த சந்தை மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்ட போதும், அத்திகதி வரையிலும் அதற்காக நிரந்தர மின் இணைப்பு வழங்கப்படாதிருந்ததுடன் 46 விற்பனைக் கடைகள் வியாபாரங்களைச் செய்வதற்காக கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.3 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) 2013 ஆம் ஆண்டில் கடுவல பேரூந்து நிலைய சந்தையில் பொருத்தப்பட்டிருந்த ரூபா 3,900,000 பெறுமதியான மின் நிலைய உயர்த்தி பல வருட காலமாக செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் அதனை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட மின் உயர்த்தியை செயற்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்ட ரூபா 968,688 பெறுமதியான மின்பிறப்பாக்கி இயந்திரம் அதிலிருந்து அகற்றப்பட்டு நகர சபை வளவில் பயனற்று துருப்பிடிக்கும் நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) பொலித்தீன் உருவாக்குவதற்காக 2016 ஆம் ஆண்டில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 494,500 பெறுமதியான பேலின் இயந்திரம் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்காமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதிகளுக்காக செய்யப்பட்ட 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 178,750 பெறுமதியான 45 வீதி பெயர்ப் பதாதைகள் சபை வளவில் களஞ்சியத்திற்கு அருகில் பாதுகாப்பின்றி போடப்பட்டிருந்தது.

(உ) மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதிகளுக் காபட் இடுவதற்காக 2017 ஒக்தோபர் 20 ஆந் திகதி ரூபா 66,612,046 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திர பொறிகளில் 06 அலகுகள் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் அத்துறுகிரிய உப அலுவலக வளவில் வைக்கப்பட்டிருந்தமை 2018 ஆம் ஆண்டின் மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

**3.6 இனங்காணப்பட்ட நட்டம்**

பிரதான அலுவலகக் களஞ்சியப் பிரிவில் வைக்கப்பட்டிருந்த ரூபா 139,380 பெறுமதியான 141 கொடிக் கம்பங்கள் காணாமல் போயிருந்தன.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக சபையினால் மதிப்பீடு செய்யப்பட்ட மீண்டெழும் செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 104 செலவின விடயங்களுக்காக நிதிஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 81,396,500 இனால் 50 சதவீதத்தை விட குறைவாக செலவிடப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகள் தொடர்பான கண்ககாய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கொடுக்கல் வாங்கல்கள் கைவிடப்பட்டமை மற்றும் பிழையாக கணக்கு வைக்கப்பட்டமை. |
| (ஆ) | ஒப்பந்தக் கட்டுப்பாடு | ஒப்பந்தங்கள் கைவிடப்பட்டமை. |
| (இ | வருமான நிர்வாகம் | நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| (ஈ) | சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் பொது வசதிகளுக்காக கிடைத்த காணிகள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை மற்றும் பாதுகாப்பிற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |